# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2019 – 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

அ) 216 ☐ ஆ) 100 ☐
இ) 20 ☐ ஈ) 217 ☐

2. புறநானூறு ________ காலத்தில் தோன்றியது.

அ) முதற்கழக ☐ ஆ) கடைக்கழக ☐
இ) தமிழ்க்கழக ☐ ஈ) இடைக்கழக ☐

3. கவிஞர் தான் காணும் காட்சியை தன் கற்பனையோடு இணைத்துக் கூறுவது

அ) தற்குறிப்பேற்ற அணி ☐ ஆ) உவமை அணி ☐
இ) உயர்வுநவிற்சி அணி ☐ ஈ) உருவக அணி ☐

4. ஆதிமொழிக் குடும்பங்களில் தொன்மையானது தமிழ் என நிறுவியவர்

அ) தனிநாயகம் அடிகள் ☐ ஆ) கால்டுவெல் ☐
இ) வீரமாமுனிவர் ☐ ஈ) தாவீது அடிகள் ☐

5. ‘‘இன்னாரென் றெதிர்காலம் அறியாமற் தடுமாறி மற்றோர் அகதியாய் மாறுவாய் இருந்து பார்’’ எனக் கூறிய கவிஞர்

அ) தாமரைக் கண்ணன் ☐ ஆ) மன்னார் அமுதன் ☐
இ) அம்பி ☐ ஈ) இரவி ☐

6. நுதல் என்பது

அ) பிறை ☐ ஆ) நெற்றி ☐

இ) முகம் ☐ ஈ) மயிர் ☐

7. உயிர்முன்உயிர் புணர்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வாழை + இலை ☐ ஆ) தாய் + நாடு ☐

இ) போர் + ஆட்டம் ☐ ஈ) பலா + சுளை ☐

8. இளவேனிற்காலக் காற்று

அ) கோடை ☐ ஆ) தென்றல் ☐

இ) கொண்டல் ☐ ஈ) வாடை ☐

9. கூர்மதி கொண்ட மாணவன். இதில் கூர் என்பது

அ) உரிச்சொல் ☐ ஆ) இடைச்சொல் ☐

இ) வினைச்சொல் ☐ ஈ ) திசைச்சொல் ☐

10. நிலமும் பொழுதும்

அ) முதற்பொருள் ☐ ஆ) உரிப்பொருள் ☐

இ) கருப்பொருள் ☐ ஈ) பருப்பொருள் ☐

11. நறை என்பது

அ) மலர் ☐ ஆ) தேன் ☐

இ) சுனை ☐ ஈ ) வண்டு ☐

12. ஊர் காண் காதையில் தென்றல் வரவு பற்றிப் பாடியவர்

அ) கண்ணதாசன் ☐ ஆ) கபிலர் ☐
இ) பாவேந்தர் ☐ ஈ) இளங்கோவடிகள் ☐

13. பல்லவர் தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்ட காலப்பகுதி

அ) கி.பி 6-9 ☐ ஆ) கி.பி 9-10 ☐
இ) கி.பி 3-6 ☐ ஈ) கி.பி 1-3 ☐

14. பழந்தமிழர் வழிபட்ட தெய்வம்

அ) உருத்திரன் ☐ ஆ) முருகன் ☐
இ) இந்திரன் ☐ ஈ) பிள்ளையார் ☐

15. படியுங்கள் என்பது

அ) தன்மை ☐ ஆ) முன்னிலை ☐
இ) படர்க்கை ☐ ஈ) எழுவாய் ☐

16. பிறவினை விகுதிகள்

அ) வி, பி ☐ ஆ) அன், ஆன் ☐
இ) அர், ஆர் ☐ ஈ) அ, இ ☐

17. வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) நிலக்கீழ் ☐ ஆ) நீரை ☐
இ) மக்கள் ☐ ஈ) வாழ்கின்றனர் ☐

18. கண் + புலன் =

அ) கட்புலன் ☐ ஆ) கண்புலன் ☐

இ) கண்ப்புலன் ☐ ஈ) கட்ப்புலன் ☐

19. ஏழை அழுத கண்ணீர் கூரியவாளுக்குச் சமம் என்பது

அ) விடுகதை ☐ ஆ) பழமொழி ☐

இ) நொடி ☐ ஈ) குறள் ☐

20. விவாகம் என்பதன் தூய தமிழ்ச்சொல்

அ) கல்யாணம் ☐ ஆ) பாணிக்கிரகணம் ☐

இ) திருமணம் ☐ ஈ) கொண்டாட்டம் ☐

21. ஆறாம் வேற்றுமைத் தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தலைமயிர் ☐ ஆ) மலைவீழ் அருவி ☐

இ) கூலி வேலை ☐ ஈ) தமிழர்பண்பாடு ☐

22. பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூ

அ) முல்லை ☐ ஆ) குறிஞ்சி ☐

இ) நெய்தல் ☐ ஈ) மருதம் ☐

23. பெரும்பொழுதுகளில் ஒன்று

அ) கூதிர் ☐ ஆ) காலை ☐

இ) எற்பாடு ☐ ஈ) வைகறை ☐

24. கலிங்கத்துப்பரணி ________ மன்னன் கலிங்க நாட்டை வெற்றி கொண்ட வரலாற்றைக் கூறுகின்றது.

அ) சேர ☐ ஆ) சோழ ☐

இ) பாண்டிய ☐ ஈ) சிங்கள ☐

25. மதிக்காக விழா எடுக்கப்பட்ட நாட்கள்

அ) 38 ☐ ஆ) 27 ☐

இ) 18 ☐ ஈ ) 28 ☐

26. இரு சொற்கள் சேரும்போது ஓரெழுத்து மறையும் புணர்ச்சி

அ) திரிதல் ☐ ஆ) கெடுதல் ☐

இ) இயல்பு ☐ ஈ ) தோன்றல் ☐

27. எழுவரை வென்ற இளவல்

அ) இரும்பொறை ☐ ஆ) நெடுஞ்செழியன் ☐

இ) கோப்பெருஞ்சோழன் ☐ ஈ ) செங்குட்டுவன் ☐

28. அரும்பு என்பது

அ) புகழ் ☐ ஆ) ஆரவாரம் ☐

இ) வண்டு ☐ ஈ ) மொட்டு ☐

29. மக்களிடையே நால்வருணப் பாகுபாட்டை ஏற்படுத்தியவர்

அ) சிங்களவர் ☐ ஆ) தமிழர் ☐

இ) இயக்கர் ☐ ஈ ) ஆரியர் ☐

30. நெடிற்றொடர்க்குற்றியலுகரம்

அ) முரசு ☐ ஆ) உப்பு ☐

இ) பாகு ☐ ஈ ) கன்று ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மாந்தன் குழுமகமாக வாழத் தொடங்கிய காலம் முதல் அவனுக்கான நிலத்தை வரையறுத்துக் கொண்டான். அந்த நிலம் அவன் வாழ்வோடு ஒன்றி அவனோடு பேசியது. அந்த நிலத்திலிருந்து அவன் தனக்குத் தேவையான உணவை எடுத்துக் கொண்டான். அதுவே அவனுக்கு உயிர்த்துணையாக இருந்தது. எந்த நிலையிலும் சொந்த மண்ணிற்கு இரண்டகம் இழைக்கக்கூடாது என்பதிலே அவன் தெளிவாக இருந்தான். ஆகவே, தன் உறவைப்போல அந்த மண்ணையும் அவன் உறங்காமல் காத்தான். உயிர்போல் நேசித்தான். அவனது மூதாதையர் அந்த மண்ணிலேதான் வாழ்ந்து களித்து, அந்த மண்ணிற்கே உரமாகிப் போனார்கள். மூதாதையரின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் அதைவிட மேலாக அவர்கள் விட்டுச் சென்ற மொழி என்பன அவனை அந்த மண்ணிலிருந்து பிரிக்க முடியாமல் செய்கின்றன. அந்த மண் அவனது உயிர்; அவனின் வாழ்வு. ஆகவேதான் மண்ணை நேசிப்பது என்பது மாந்தனுக்கு ஒரு சிறப்பு வாய்ந்த விட்டுக் கொடுக்க முடியாத தேவை. அவன் வாழ்வு அந்த மண்ணிலேதான் செதுக்கப்பட்டது. அந்த மண்ணில் வீசும் காற்று அவன் மொழியைச் சுமந்த வண்ணம் இனிய இசையாகிக் காதிலே ஒலித்து மகிழ்விக்கின்றது. இம்மண்பற்றுத்தான் எம்மறவர்களையும் போராட வைத்தது. எந்த ஓர் இனத்தின் வரலாற்றிலும் இடம்பெறாத வீரம் எம் தமிழ் இனத்தின் வீரம். எம்முடைய இன அடையாளத்தைக் காப்பதற்கான போராட்டம். தலைவர்களை மாந்தர்கள் உருவாக்குவதில்லை. வரலாறுதான் தலைவர்களை உருவாக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வாழ்ந்த தமிழ்மொழிக்குப் புதிய அடையாளத்தைத் தோற்றுவித்தது எங்கள் தலைமையே!!

1. தலைவர்களை உருவாக்குவது எது?

___

___

2. மாந்தன் எதைப் போல் தன் மண்ணை நேசித்தான்?

___

___

3. மண்ணில் வீசும் காற்று எவ்வாறு அவனை மகிழ்விக்கிறது?

___

___

4. மாந்தன் எப்போது தன்நிலத்தை வரையறுத்துக்கொண்டான்?

___

___

5. எவை மாந்தனை மண்ணிலிருந்து பிரிக்க முடியாமல் செய்கின்றன?

___

___

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. கரிகால்பெருவளத்தானும் பெருஞ்சேரலாதனும் போர் புரிந்த இடம் எது?

2. வடக்கிருத்தல் என்றால் என்ன ?

3. திருப்பரங்குன்றத்திலிருந்து தென்றல் புறப்பட்டு வரும் அழகை பாடிய புலவர் யார்? இப்பாடல் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன?

4. ஆரியர் தமிழரிடையே புகுத்திய திருமண வழக்காறுகள் எவை?

5. உலக நாடுகள் தமிழீழவிடுதலைப் போராட்டத்தை ஏன் நசுக்க விரும்பின?

6. வெந்ததே சிந்தை என்ற கவிதையில் குறிப்பிடப்படும் இனவழிப்புச் செயல் எது?

7. பதிஎழு அறியாப் பழங்குடி என்ற கூற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? இதைக் கூறியவர் யார்?

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



விடுதலை ஒரு நாள் கிடைக்கும் - நல்ல
விடிவும் நமக்குக் கிடைக்கும்

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் ஆகுபெயர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   சினையாகுபெயர் ______________________

   குணவாகுபெயர் ______________________

   தொழிலாகுபெயர் ______________________

2. அல்வழித் தொகை எத்தனை வகைப்படும்? ______________________

   பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   உம்மைத்தொகை ____________ பண்புத்தொகை ____________

   உவமைத்தொகை ____________ வினைத்தொகை ____________

3. இலக்கண வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்? ________

   அவை எவை? ______________________

   அவற்றில் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   ____________________ ____________________

4. பின்வரும் அணிகளை இனங்கண்டு அவற்றின் பெயர்களைத் தருக.

   வானளாவிய வள மனைகள் ______________________

   அறிவுக்கடல் ______________________

   இமயத்தோள் ______________________

5. பின்வரும் குற்றியலுகரங்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.

   பயறு ____________ உஃது ____________

   மூழ்கு ____________ பந்து ____________

   தோடு ____________ வண்டு ____________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக**

இக்கால இளைஞர்களின் நிலை மிக்க துன்பந்தருவதாக இருக்கிறது. சிற்றூர், நகரம் என்ற வேறுபாடின்றி இளைஞர்கள் பரவலாக எங்கும் ஒரே வகையான நிலையில் உருவாகி வருகின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சியும் பண்பாட்டு ஒழுக்கக் கேடும் அவர்களை வேகமாக மாற்றி அலைக்கழித்துக்கொண்டு வருகின்றன. அவற்றிலிருந்து மீளமுடியாதவர்களாக இன்றைய இளைஞர்கள் நலிந்து கொண்டு வருகின்றனர். பெற்றோர்கள் அனைவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். இளைஞர்களின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கருத்துச் சொல்வதற்கும் திருத்துவதற்கும் நேரமில்லாதவர்களாகப் பல பெற்றோர்கள் உள்ளனர். இருந்தும் தம் பிள்ளைகளைத் திருத்துவதில் அக்கறை கொண்டுள்ள போதும் பெற்றோர்களது கருத்துகளைக் கேட்டுச் செயற்பட இன்றைய இளைஞர்கள் மறுக்கின்றனர். இளைஞர்களின் இத்தகைய போக்கு நாட்டின் எதிர்காலத்தைப் பயனற்றதாகச் சீர்குலைத்துவிடுமோ? என்று அஞ்ச வேண்டியுள்ளது. எனவே, இவர்கள் தங்கள் தனிவழிப் போக்கை மாற்றி வீட்டுக்கும் நாட்டுக்கும் பயனுள்ள இளைஞர்களாக உருவாக வேண்டும். அதற்கு ஒவ்வொரு இளைஞர்களும் தங்கள் தங்கள் தவற்றை உணர்ந்து செயற்பட்டால் எதிர்காலம் சிறந்ததாக அமைந்து விடுவதுடன் அவர்களது வாழ்க்கையும் ஒளிமயமாக அமைந்துவிடும். வருமுன் காப்போம் என்ற முதுமொழிக்கிணங்க ஒவ்வொரு இளைஞரும் செயற்படுவதே வெற்றியைத் தீர்மானிக்கும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் வாழ்வில் ஆரியம் ஊடுருவல்
- ✸ ஒற்றுமையே வலிமை
- ✸ நீர் கற்கும் தொழிற்கல்வியும் தாயக உறவுகளுக்குச் செய்யும் பணியும்

புள்ளிகள் 20